1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் நினைப்பதையெல்லாம் எழுதிக் கொடுத்தால் குடிநீர் வாரியத் தலைவரோடு கலந்து பேசி செய்ய முடிந்ததை இந்த அரசு செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம் : கடலோரப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு குடிநீர் கொடுக்க, கடல் நீரைக் குடிநீராக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கலவை பிர்க்காவில் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 215—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆற்காடு தொகுதி கலவை பிர்க்காவில் பல கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது செயல் படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதியிலுள்ள ஆற்காடு மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்துள்ள 8 சிற்றூர்களுக்கு ஊரக குடி நீர்த் திட்டத்தின் கீழ் உடனடியாக குடி நீர் வசதியளிக்கத் திட்டமிட்டு அவைகளில் 5 சிற்றூர்களில் அனைத்து வேலைகளும் முடிவுற்றுள்ளன. இரண்டு சிற்றூர்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு சிற்றூரில் வேலைகள் விரைவில் எடுத்துக் கொள்ளப் பட இருக்கின்றன.